


02. 12. 2025

தலைப்புச் செய்திகள்

- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பான எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்தி வைக்கப் பட்டன.
- வாரணாசியில் இன்று தொடங்கும் காசி தமிழ் சங்கமம் நிகழ்வில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி பங்கேற்கிறார்.
- தமிழ்நாட்டில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 96 குடியிருப்புகளை சென்னையில் முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.
- டிட்வா புயலால் 85 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் சேதமடைந்து உள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. K.K.S.S.R. ராமச்சந்திரன் கூறியுள்ளார்.
- திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு காஞ்சிபுரம், ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் இன்று கேள்வி நேரம் தொடங்கியதும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பிரச்சனையை எழுப்பி எதிர்கட்சியினர் கோஷங்களை எழுப்பினர்.

இந்த அமளியினூடே உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளித்தனர்.

இருப்பினும் காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாடி கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதியில் குழுமி வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து விவாதிக்க வலியுறுத்தினர்.

இதனால் நிலவிய கூச்சல் குழப்பங்களிடையே அவை முதலில் நண்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது, எதிர்கட்சியினர் அவை நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைவிக்க கூடாது என்று அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கோரிக்கை விடுத்தார்.

எந்த பிரச்சனை குறித்தும் விவாதிக்க அரசு தயாராக உள்ளதாகவும், விவாதங்கள் முறையாகவும், அமைதியாகவும் நடைபெற வேண்டும் என்றும் கூறினார்.

வாக்காளர் பட்டியல் பிரச்சனையில் மட்டுமே எதிர்கட்சிகள் பிடிவாதமாக உள்ளதாக கூறிய அவர், விவாதிப்பதற்கு வேறு ஏராளமான விஷயங்கள் உள்ளதாக எடுத்துரைத்தார்.

ஆனால் எதிர்கட்சிகள் தொடர்ந்து முழக்கமிடவே அவை நடத்தும் அலுவலர் பிற்பகல் 2 மணிவரை மக்களவையை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் அவை பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

கிரண் ரிஜிஜு

வாக்காளர் பட்டியல் பிரச்சனையில் அவை அலுவல்களை நடத்த விடாமல் எதிர்கட்சியினர் தொடர்ந்து அமளியில் ஈடுபடுவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், அவையில் விவாதிப்பதற்கான அலுவல் பட்டியல் தயாராக உள்ளதாகவும், விவாதத்திற்கான பல்வேறு பிரச்சனைகள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனிடையே காங்கிரஸ் கட்சியின் திரு. ராகுல்காந்தி, திருமதி. சோனியா காந்தி, திருமதி. பிரியங்கா காந்தி உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினகள் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை திரும்பப்பெற வேண்டுமென்று கோரி

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖❖❖

மக்களவை

வளர்ச்சியடைந்த தேசமாக இந்தியா உருவாக அனைத்து மாநிலங்களின் துறை வளர்ச்சியும், முன்னேற்றமும் அவசியமானது என்று மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், பிரதமரின் மீன்வள உற்பத்தி திட்டத்தின் கீழ், மீன்வளத் துறையில் புரட்சி ஏற்படுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

எந்தவொரு திட்டத்தின் வெற்றிக்கும் மாநில அரசுகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

மக்களவை கூட்டுறவு

ஊரக பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு புரட்சிகரமான திட்டங்கள் கூட்டுறவு துறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவு துறை இணையமைச்சர் திரு. முரளீதர் மோஹல் கூறியுள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், நாடுமுழுவதும் 8 லட்சம் கூட்டுறவு சங்கங்கள்

உள்ளதாகவும், அதில் 30 கோடி மக்கள் உறுப்பினர்களாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவிகிதம் பேர் கூட்டுறவுகளுடன் இணைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

தமிழ் சங்கமம்

காசி தமிழ் சங்கமம் வாரணாசியில் இன்று தொடங்குகிறது.

தமிழக ஆளுநர் திரு. R. N. ரவி, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்

இரண்டு கட்டங்களாக நடைபெறும் இந்நிகழ்வில் காசி மற்றும் தமிழகத்திற்கு இடையே உள்ள பிணைப்பை பறைசாற்றும் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

தமிழகம் மற்றும் வாரணாசிக்கு இடையே தொன்மை மிகு இணைப்பை பறைசாற்றும் வகையில் காசி சங்கமம் நடத்தப்படுவதாக அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

தமிழ்மொழியின் சிறப்பை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் நிகழ்வாக இது அமையும் என்றும் குறிப்பிட்டார்.

தென்காசியிலிருந்து அகஸ்தியர் வாகன பிரச்சார பயணம் இன்று தொடங்கியுள்ளது.

காசி சங்கமத்தின் நிறைவு விழா ராமேஸ்வரத்தில் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

வரி கட்டமைப்பில் நம்பகத்தன்மையும், நேர்மையும் உறுதி செய்யப்படும் அதே வேளையில், சரியான தகவல் பரிமாற்றத்திற்கு உலகளாவிய நாடுகளின் ஒத்துழைப்பின் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று உரையாற்றிய அவர், வரி விஷயங்களில் வெளிப்படைத் தன்மையின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் வரி கட்டமைப்பில் நம்பகத்தன்மை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், நிலையான வளர்ச்சிக்கும் நிதி மீட்சிக்கும், சீரமைப்பிற்கும் வெளிப்படைத் தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாடு எழுது பொருள் அச்சுத்துறை பணியாளர்களுக்கு 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை தண்டயார் பேட்டையில் கட்டப்பட்டுள்ள 96 குடியிருப்புகளை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் 2024-ம் ஆண்டிற்கான எழுதுகோல் விருதையும் முதலமைச்சர் இன்று வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

K.K.S.S.R.

தமிழ்நாட்டில் அக்டோபர் மாத, மழை வெள்ள பாதிப்பிற்கு பயிர் நிவாரணமாக ஹெக்டேர் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று மாநில பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. K.K.S.S.R. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழிலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், டிட்வா புயலால் 85 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் சேதமடைந்து உள்ளதாகவும், கணக்கெடுப்பு பணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

வானிலை ஆய்வுமைய கணிப்புகளை மீறி சென்னையில் கனமழை பெய்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புயலால் மாநிலத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளதாக கூறியஅவர், 582 கால்நடைகள் பலியானதாகவம் தொவித்தார்.

ஆயிரத்து 601 குடிசை வீடுகள் சேதமடைந்ததாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

தென் மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக டிட்வா புயல் வலுவிழந்த நிலையில் சென்னைக்கு

கிழக்கே, தென் கிழக்கே 40 கிலோ மீட்டர் தொலைவில் தற்போது இது நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 12 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரி கடலோர பகுதிகளை நோக்கி தென்மேற்கு திசையில் மெதுவாக நகரக்கூடும் என்றும்,

அதற்கடுத்த 12 மணிநேரததில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவிழக்க கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இன்று திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மாவட்டங்களில் மிக கனமழையும்,

வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

மழை மாவட்டங்கள்

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி, பொறையார், திருக்கடையூர், செம்பனார்கோவில், தில்லையாடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இன்றும் பரவலாக மழை பெய்து வருவதால் விளை நிலங்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சென்னை புறநகர் பகுதிகளிலும், செங்கல்பட்டு மாவட்ட சுற்றுவட்டார பகுதிகளிலும் குளிர்ந்த காற்றுடன் பரவலாக

மழை பெய்து வருவதால் தாழ்வான பகுதிகளிலும் முக்கிய பிரதான சாலைகளிலும் மழைநீர் தேங்கியுள்ளது.

இதனால் வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனிடையே சென்னை விமான நிலையத்திலிருந்து 6 உள்நாட்டு விமான சேவைகளும் ஒரு சர்வதேச விமான சேவையும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நிர்வாக காரணங்களுக்காக இது ரத்து செய்யப்பட்டு உள்ளதாகவும், பயணிகளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதாகவும் விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

❖❖❖❖❖❖❖❖

பாலாறு

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அருகே வாயலூர், பாலாறு தடுப்பணை இந்த ஆண்டு 2-வது முறையாக மீண்டும் நிரம்பி வழிகிறது.

வடகிழக்கு பருவமழை காரணமாக நிரம்பி வழியும் இந்த தடுப்பணையை மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

இதனிடையே நீர்வரத்து மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால் தடுப்பணையில் குளிக்கவோ, செல்ஃபி எடுக்கவோ பொதுமக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடுப்பணையின் நீர் கடலில் சென்று கலப்பதால் அணையின் உயரத்தை அதிகரிக்க வேண்மென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

கோவை

கோவை மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் தீவிர திருத்த படிவங்களை பொதுமக்களின் பகுதிகளுக்கே சென்று பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பவன் குமார் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை மாவட்டத்தில் விளைநிலங்களில் தேங்கிய மழைநீர் மற்றும் ஆறுகளில் ஆக்கிரமித்துள்ள ஆகாயதாமரை அகற்றும் பணிகளில் பொதுப்பணித் துறையினர் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரத்தில் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கிடங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன்

அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று ஆய்வு செய்தார்.

திருச்சி பொன்மலைக்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக முதன்முறையாக வந்தே பாரத் ரயில் கொண்டுவரப் பட்டுள்ளதையடுத்து முழுவீச்சில் பணிகள் நடைபெறுகின்றன.

2022-ம் ஆண்டு முதல் சென்னை – திருவனந்தபுரம் மார்க்கத்தில் வெற்றிகரமாக இயக்கப்பட்டு வந்த வந்தே பாரத் ரயில் இது என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

ஸ்ரீரங்கம்

பூலோக வைகுண்டம் என்று போற்றப்படும் ஸ்ரீரங்கம் அருள்மிகு ரெங்கநாத சுவாமி திருக்கோவில் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவால் திறப்பு வைபவத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சரவணன் அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

திருவண்ணாமலை

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் நாளை மகா கார்த்திகை தீபத்திருவிழாவை ஒட்டி அதிகாலை 4 மணிக்கு ஆலயத்தில் பரணி தீபமும்,

மாலை 6 மணிக்கு 2 ஆயிரத்து 668 அடி உயர அண்ணாமலையார் மலை மீது மகா தீபமும் ஏற்றப்படுகிறது.

இதற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖❖❖❖❖❖❖❖

விபத்து

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுதூர் அருகே தனியார் பட்டாசு தொழிற்சாலைக்கு ஆட்களை ஏற்றிச் சென்ற வேன் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்த 7 பேர் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖